*முதுகலைமாணி : 2011-2012*

*இஸ்லாமிய நாகரீகத்தின் வளர்ர்சி :* **isc- 603**

# *ஐரோப்பியர்களால் இருண்ட யுகம் என்று வர்ணிக்கப்படும் கி.பி.500-1500க்கும் இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம்களின் அறிவியல் புரட்சியை விளக்கி, அது அவர்களை விட்டும் கைநழுவிச் சென்றமைக்கான காரணிகளையும் மதிப்பீடு செய்க:*


**மாணவர் பெயர்: எம். ஜே. எம். ரிஸ்வான்**

பதிவு இலக்கம்: **HD/MA/ 08-09- /559**

விரிவுரையாளர்: **அஷ்ஷைக்: எம். ஏ.எம். யஸீர்** M.phil

(அரபு, இஸ்லாமிய நாகரீத்துறை, பேராதனைப் பல்கலைக் கழகம். பேராதெனிய)

# முன்னுரை

புகழ் அனைத்தும் அல்லாஹ்விற்கே சொந்தமானது. அவனது அருளும், சாந்தியும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் வழி நடந்த மக்கள் மீதும் நிலையாக உண்டாகட்டுமாக!
இருண்ட யுகம் என்று வர்ணிக்கப்படுகின்ற ஐரோப்பா பண்பாட்டு, கலாச்சார, சமூக, பொருளாதார அரசியல் வீழ்ச்சியில் மாட்டிக்கொண்ட நிலையில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் ரோமப் பேரரசு வீழ்ச்சியடைகிறது. இக்காலப்பகுதி **عصور الظلمات இருள்களின் யுகம் என** அரபுக்களால் ***அழைக்கப்படுகின்றது.***

குளியல் அறைகளில் குளிப்பது பாவம், குஷ்டரோக நோய் இறை தண்டனை, எனவே, குஷ்டநோயாளர்களை தீயிட்டுக்கொழுத்த வேண்டும் என்ற மூடநம்பிக்கையில் ஐரோப்பா வாழ்ந்து கொண்டிருந்தது. நிம்மதி இழந்து, பண்பாட்டில் பாரிய வீழ்ச்சியுடன் காணப்பட்ட ஐரோப்பா இருளில் மூழ்கிக்கிடந்தது என்பதுதான் உண்மை.
கி.பி. ஏழாம் நூற்றாண்டில் மத்திய கிழக்கில் உதயமான இஸ்லாமியச் சூரியன் மத்திய கிளக்கிலும், அங்கு வாழ்ந்த மக்களுக்கும் அறிவொளி பாய்ச்சியது. அதன் கலாச்சார, அறிவியல் எழுச்சி அளப்பதிந்ததாகக் காணப்பட்டது. அந்தப் பேரொளியை இஸ்லாமிய ஆட்சியாளர்கள் வீரியமாக உலகின் நாலா திசைக்கும் எடுத்துச் சென்றனர். சின்னாஸியா, ஆபிரிக்கா, ஐரோப்பா ஆகிய பிரதேசங்கள் வரை அது விரிவடைந்து சென்றது.
நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னால் வந்த ஆட்சியாளர்கள் பல பிரதேசங்களைக் கைப்பற்றி அங்கு வாழ்ந்த மக்களை சமமாக நடத்தியதுடன், அங்கு இஸ்லாமிய அறிவொளி நிலையங்களையும் நிறுவினார்.
இந்நிலையில் இஸ்லாமிய எழுச்சியானது கிழக்கில் சீனா முதல் மேற்கில் அட்லாண்டிக் சமுத்திரம் வழியாக ஊடறுத்து பிரான்ஸின் எல்லை வரை இஸ்பைன், அல்லது அந்தலுஸியா தேசங்களை வந்தடைந்தது.
பலநூறு ஆண்டுகள் இப்பிரதேசத்தில் அதன் எழுச்சி நிழலை விரித்திருந்தது. இக்காலப்பகுதியில் இஸ்லாமிய உலகு பார்வைகளின் திசையாகவும், திக்கற்றோரின் வழிகாட்டியாகவும், முஸ்லிம்கள் அல்லாத ஏனெய இனங்களின் சுவனபூமியாகவும் விளங்கியது (1)

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவியல் விஞ்ஞானப் புரட்சியானது சிலுவைப்போரின் போது முஸ்லிம்களிடம் இருந்து திருடிச் சென்ற அறிவியல் பொக்கிஷங்களில் இருந்தே இந்த எழுச்சி காப்பியடிக்கப்பட்டு விருத்தி செய்யப்பட்டிருக்கின்றது.
அறிவியல் சாதனைகள் புரிந்த பல நூறு முஸ்லிம் விஞ்ஞானிகள், அறிஞர்களின் புதியபுதிய கண்டுபிடிப்புக்கள் பற்றி நாம் துல்லியமாக அறிய முடியாத போதும் ஐரோப்பாவின் இருண்ட யுகத்திற்கு அவர்களின் முயற்சிகள் ஒளிர்ஊட்டியது பற்றி கொஞ்சம் சிந்திக்க தூண்டும் இந்த தலைப்பை முழுமையாக ஒரு ஆய்வாளனால் பொதுவாக முன்வைக்க முடியாது என்பதும், குறிப்பாக வரலாற்றில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கும் என்போன்ற சாதாரண மாணவர்களால் முன்வைப்பது என்பது கடினமே.

---------------------

**1-(11 / 1) - أسس النهضة الراشدة**

இருப்பினும், அல்லாஹ்வின் அருளால் பாரிய முயற்சிக்கும், சிரமத்திற்கும் பின் பின்வரும் தலைப்புக்களில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. இதற்குரிய உசாத்துணைகளாக அரபு நூல்கள் மாத்திரமே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றது. சில போது அரபு மொழியில் அமைந்த பெயர்கள், சொற்பிரயோகங்கள் ஆங்கில சொற்பிரயோகங்களுக்கு நெருக்கமமான சொற்பிரயோகங்களாக தப்பட்டுள்ளன.

**ஐரோப்பியர்களால் இருண்ட யுகம் என்று வர்ணிக்கப்படும் கி.பி. 500-1500க்கும் இடைப்பட்ட காலத்தில் முஸ்லிம்களின் அறிவியல் புரட்சியை விளக்கி, அது அவர்களை விட்டும் கைந நழுவிச்சென்றமைக்கான காரணிகளையும் மதிப்பிடுக!** என்ற கேள்வியைப் பிரதானப்படுத்தி பின்வரும் முக்கிய தலைப்புக்களில் அது பற்றி பேசப்பட்டிருக்கின்றன.

_ இருண்ட மத்திய காலப் பகுதி பற்றிய அறிமுகம்.

_ இருளில் மூழ்கிய ஐரோப்பாவின் நிலை பற்றி

_ அறிவியல் எழுச்சிக்கு களம் அமைத்துத் தந்த வஹியின் வருகை.

_ அறிவியலுக்கு ஆர்வமூட்டிய இஸ்லாம்

_ அறிவியல் முன்னோடிகளாக விளங்கிய முஸ்லிம்கள் பற்றி

_ முஸ்லிம்களின் துறைசார் அறிவியல் கண்டுபிடிப்புகள் (**வானியல் , கணிதவியல், புவியியல்…**)

_ முஸ்லிம்கள் கவனம் செலுத்திய முக்கிய பகுதிகள்

_ முஸ்லிம்களின் அறிவியல் புரட்சிக்கு வித்திட்ட காரணிகள்

_ கி.பி 9ம் ஆண்டும் அப்பாஸிய கலீ∴பா ம∴மூன் அவர்களின் அறிவியல் நடவடிக்கைகளும்

_ அறிவியலை நோக்கி தொய்வின்றி பயணித்த முஸ்லிம்கள்

_ கைநழுவிப்போனமைக்கான காரணிகள்

_ முடிவுரை

_ உஸாத்துணைகள்

குறை என்னைச் சார்ந்தது. நிறைகள் அல்லாஹ்வின் அருளில் உள்ளது. பூரணத்தன்மை கொண்ட அல்லாஹ்வே புகழுக்குரியவன்.

இவண்:

**எம். ஜே. எம். ரிஸ்வான் HD/M.A.08-09-559**

# இருண்ட மத்திய காலப் பகுதி பற்றிய அறிமுகம்.

கி.பி. 500 காலப் பகுதியில் மேற்கத்திய ரோமானியப் பேரசின் வீழ்ச்சியுடன் இது ஆரம்பானாலும் ஆய்வாளர்கள் மத்தயில் இதன் ஆரம்பம் பற்றிய கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததோடு அது ஆரம்பிப்பித்து, மேற்கு ஐரோப்பாவில் 1789ல் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியுடன் அது முடிந்துவிட்டதாகவும் மற்றொரு கருத்துக் கூறப்படுகின்றது. ரோமானியப் பேரசசின் மத்திய அரசின் வீழ்ச்சியுடன் ஜுர்மானிய்யா என்ற கோத்திரம் கிளர்ச்சி செய்ததை அடுத்து அதை சமாளிக்க முடியமாது போனதைத் தொடர்ந்து ஐரோப்பாவில் பல மாற்றங்கள் ஏற்பபட்டதாக வரலாற்றாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

அந்த வகையில் கி.பி.476-ம் ஆண்டை த்திய காலப் பகுதியின் ஆரம்பமாகவும், கி.பி.1453-ம் ஆண்டை அதன் முடிவுக்காலமாகமாகவும் கருதுகின்றனர். இந்த ஆண்டுதான் கொஸ்தான்தி நோபில் - இஸ்தன்பூல்- உஸ்மானியர் கைவசம் வந்தது. அல்லது , கி.பி. 1492-ம் ஆண்டு கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்த ஆண்டு இது மத்திய காலப் பகுதியில் இருந்து நகர்ந்து புதியதோர் யுகத்தை நோக்கிய வருடம் என்கின்றனர்.

கிரிஸ்தவ திருச்சபைகளின் கெடுபிடிகள் தொடர்ந்த இக்காலப் பகுதியை இருண்ட காலப்பகுதி என்றும், அவற்றில் இருந்து மனிதர்கள் சிந்தனை ரீதியான சுதந்திரக்காற்றை நுகர்ந்த யுகத்தை முறையே மத்திய காலத்தின் ஆரம்பமும் முடிவுப்பதியும் என சில ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். (1)

இது பற்றி விளக்குகின்ற எகிப்திய அறிஞர்களுள் ஒருவரான முஹம்மத் கஸ்ஸாலி என்பவர் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

*இந்தக் காலப்பகுதியில், ஐரோப்பா புல்மேயும் கால்நடைகளில் ஒரு கூட்டமாக இருந்தது. அவர்கள் மீது இஸ்லாம் நன்மையையும், அருளையும் சொரிந்திருக்காதிருப்பின் இன்றுவரை அவர்கள் கால்நடைகளாகவே இருந்திருப்பர் (2)*

இவ்வாறு, மனித பண்பாடுகள், நாகரீகம் அனைத்தையும் தொலைத்து, நடுக்கடலில் தத்தளிப்பவன் போன்று ஐரோப்பாவின் நிலை காணப்பட்டது. சுருக்கமாகக் கூறுவதானால் ஐரோப்பா, மனித மிருகங்களைக் கொண்ட இருண்ட கண்டமாக இன்று காட்சியளிப்பது போன்று அன்று காட்சியளித்தது எனலாம். இதுதான் அன்றையதும் இன்றையதுமான ஐரோப்பாவின் நிலைபற்றிய சரித்திரச் சுருக்கமாகும்.

இந்தக் கிரிமியால் ஐரோப்பாவை மாத்திரம் பாதிப்புக்குள்ளாகவில்லை. மாற்றமாக, அது முழு உலகத்தையும் தொற்றிக் கொண்டது. அதன் தாக்கம் அரபுப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்களையும் கடுமையாகத்தாக்கியது. ஐரோப்பாவின் ஒழுக்கச் சீர்கேடுகள் என வர்ணிக்கப்படுவதெல்லாம் அரபுப் பிரதேசத்திலும் காணப்பட்டது.

பல தெய்வ நம்பிக்கை, பெண்வதை, வட்டி, வர்க்க பேதம், சாதியம், விபச்சாரம், மது, சூது, கொலை, கொள்ளை, தலைமைத்துவப்போட்டி, என சகல மனித வாழ்வின் அடிப்படைப் பகுதிகள் அனைத்தும் வீழ்ச்சியடைந்தே காணப்பட்டன. பண்பாடு, நாகரீகம் என்பது தடைசெய்யப்பட்ட மருந்தாக இருந்தது.

----------------------

1)http://arz.wikipedia.org/wiki/%D8%A7%D9%84%D8%B9%D8%B5%D9%88%D8%B1_%D8%A7%D9%84%D9%88%D8%B3%D8%B7%D9%89

2- - محمد الغزالي : الإسلام والاستبدا السياسي - طبول دقت الإسلام (200/1) من المكتبة الشاملة .

# இருளில் மூழ்கிய ஐரோப்பாவின் நிலை பற்றி

ماذا خسر العالم بانحطاط المسلمين **''முஸ்லிம்களின் வீழ்ச்சியினால் மேற்குலகு அடைந்த நஷ்டம்தான் என்ன''** எனக் கேள்வியுடன் ஆரம்பாகும் தனது நூலில் இந்தியத்துணைக் கண்டத்தின் பேறிஞர்களுள் ஒருவரான அபுல்ஹஸன் அலி நத்வி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு விபரிக்கின்றார்கள்.

'கி.பி. ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகள் மனித வரலாற்றில் கருத்து வேறுபாடு கொள்ள முடியாத மிகவும் வீழ்ச்சியடைந்த நூற்றாண்டாகும். அவை, மனித இனம் படுபாதாளத்தில் இருந்த நூற்றாண்டுகள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அந்த வீழ்ச்சியில் இருந்து மனிதர்களைத் தடுப்பதற்கு எந்த வல்லரசுகளும் இருக்கவில்லை. நாட்களின் நகர்வுகள் மனித சமூகத்தின் வீழ்ச்சியின் வேகத்தையும், அதன் சரிவையும் மென்மேலும் அதிகரித்தது. இந்தக்காலத்தில் மனிதன் தனது படைப்பாளனை மறந்திருந்தான், அவ்வாறே, தன்னையும், தனது நிலையையும், தனது நேர்வழியையும் மறந்து காணப்பட்டான். நன்மை, தீமை என்ற இரு அம்சங்களை மனிதன் பிரித்து அறியும் சக்தியை இழந்து காணப்பட்டான், மானுடவழிகாட்டிகளான நபிமார்களின் வழிமுறை மங்கிக்காணப்பட்டது. அதற்காக அவர்கள் மூட்டிய விளக்குகள் எல்லாம் அதற்குப் பின்னால் வீசிய புயல்காற்றுகளால் அணைந்து போயின. அல்லது அதன் பிரகாசம் பலவீனமானதாய் காணப்பட்டன. சில இதயங்கள் மாத்திரமே அதனால் ஒளிர்வு பெற்றன. இது இவ்வாறிருக்கு வீடுகளுக்கே பிரகாசம் இல்லையாம், நாடுகளுக்கா? பிரகாசம் கிடைக்கும்! மார்க்கப்பபோதகர்களாக இருந்த மனிதர்கள் வாழ்வியல் மைதானத்தில் இருந்து வாபஸ் பெற்று, மார்க்கத்தை பாதுகாக்கவும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், நிம்மதியும், அமைதியும் வேண்டியும், வாழ்வின் சுமைகள், கஷ்டங்களில் இருந்து சோர்வுற்றும், வெருண்டும் மடங்கள், கோயில்கள், ஆசிரமங்கள் என்பற்றின் பக்கம் ஓதுங்கிக் கொண்டனர். அவர்களில் எஞ்சியோர் மன்னர்களுடன் கலந்து உறவாடினர். அவர்களுடைய அத்துமீறல்களுக்கும், பாவங்களுக்கும், மனிதர்களின் சொத்துக்களை தவாறான வழியில் உண்ணவும் துணை போனார்கள்.

பிரதான மதங்களாக விளங்கிய மிகப் பெரிய மதங்கள் இருட்டடிப்பாளர்களுக்கும், குழப்பம் விளைவிப்போருக்கும் இரையாகியது. அதனால் அதன் தனித்தன்மையை அது இழந்து தவித்தது. அதைப் பின்பற்றி நடந்த முன்னோர்கள் அது பற்றி எடுத்துக் கூறப்பட்டால் அறியமாட்டார்கள் எனும் அளவு ஒழுக்கச்சீரழிவு, சீர்கோடுகள் அரச வட்டங்களில் அரங்கேறியது.

உலகுக்கோ, தமது மக்களுக்கோ எவ்வித தூதுத்துவச் செய்தியும் இன்றி அரசர்கள் தமது சுயநலனில் மட்டும் குறியாக இருந்தனர். அது தனது ஆண்மீகப் பெறுமானத்தை இழந்தது. மட்டுமின்றி, வான் மார்க்கத்தின் தெளிவைத் தரும் மார்க்கபோதகரை தன்னிடம் வைத்துக் கொள்ளவுமில்லை.(1)

பல கலாச்சாரங்களின் கேந்திர மத்தியஸ்தளமாக விளங்கிய ரோமப் பேரரசு இருண்ட காலப்பகுதி எனப்படும் மத்திய காலப்பகுதியில்- அதாவது கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு ஆரம்பத்துடன்- தனது சரிவையும் நிலை நிறுத்திட ஒழுக்குச் சீர்கேட்டிலும், பின்னடைவிலும் பிரசித்தி பெற்று விளங்கிய மத்திய கால கலாச்சாரத்துடன் இணைந்து சரிவை நோக்கிப் பயணித்தது.

பல நூற்றாண்டுகள் ஐரோப்பாவை ஆக்கிரிமித்திருந்த அந்த இருள் நவீன காலத்திலும் தொடர்கின்றது. அந்தக்காலங்களில் மத்திய கிழ்க்கில் பாரிய அறிவியல் எழுச்சி காணப்பட்டது. அது கி.பி.ஏழாம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களில் இஸ்லாத்தின் பிரகாசம் அங்கு வீசுகின்ற வரை அது பரவிக்காணப்பட்டது என இஸ்லாமிய ஆய்வாளரான **அஹ்மத் அல்கஸஸ்** என்பவர் சுட்டிக்காட்டுகின்றார். (2)

---------------------------------------------------

1- ماذا خسر المسلمون بانحطاط المسلمين ص 39 .  -2- أسس النهضة الراشدة لأحمد القصص . (11/1)

ஐரோப்பாவின் இருண்ட காலம் பற்றி படிக்கின்ற போது அறியாமை என்பது ஐரோப்பியர்களுக்கு பிறப்பிலேயே எழுதப்பட்டது போல இருந்து வந்திருக்கின்றது. ஆனால் இன்று ஐரோப்பா அதை மறந்து தான் பிறப்பிலேயே அறிவின் சிகரமாக இருந்து வந்தது போல உலகில் தன்னைப்பற்றி அறிமுகப்படுத்திக் கொள்கின்றது.
**அறியாமை, கற்பனை, கலாசார வீழ்ச்சி என்பன போன்றவற்றில் ஐரோப்பா மூழ்கிக்கிடந்தது. மதத்தின் பெயரால் மக்கள் சுதந்திரம் பறிக்கப்பட்டது. மனிதர்கள் உலகை வெறுத்து வாழ்வது கடமை என்ற கிரிஸ்த மதப்போதனையால் சிவில் சமூக வாழ்வில் பாரிய பாதிப்பு ஏற்பட்டது. இதனால் ஐரோப்பா கண்டத்தில் மாத்திரம் 1000 ஆண்டுகள் சனத் தொகையில் எந்த மாற்றமும் நிகழவில்லை. இங்கிலாந்திலும் அவ்வாறே 1000 ஆண்டுகள் கதைதான் எனக் குறிப்பிடுகின்றார் அலிஹஸன் நத்வி (ரஹ்) அவர்கள். (1) இதுதான் ஐரோப்பாவின் நிலை பற்றிய சுருக்கமாகும்.**

ஐரோப்பாவின் எழுச்சியில் அரபு இஸ்லாமிய கலாச்சாரத்தின் தாக்கம் பற்றி இஸ்லாமிய ஆய்வாளரான ஷவ்கி அபூகலீல் الحضارة العربية الإسلامية وموجز الحضارات السابقة என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

அரபு வெற்றிகள் சென்றடைந்த அன்தலூஸியா, ஸகலிய்யாதீவு, தென் இதாலி ஆகிய பிரதேசங்களைத் தவிர மத்திய காலப்பகுதியில் ஐரோப்பா இருளில் மூழ்கிக்கிடந்தது. இஸ்லாமிய கலாச்சாரம் அதன் மூலை முடுக்கள் எல்லாம் ஒளி வீசியது. அதன் மக்களின் சிந்தனைகளைக் கிளறியது. அரபுக்கள் சென்றடைந்த பிரதேசங்களில் இருந்து ஐரோப்பா தனது எழுச்சிக்கானதும், உறக்கத்தில் இருந்து விழுத்தற்குமான பயணத்தை திடீர் எனத் தொடக்கியது எனக் குறிப்பிட முடியாது. ஏனெனில் அவர்கள் பாரிய பாரம்பரிய கலாச்சாரத்திற்கு சொந்தக்காரர்களாகும். உயரிய இந்த கலாச்சாரத்தை ஐரோப்பியர்கள் மொட்டையாகவே எடுத்தார்கள். அதாவது அவர்கள், சடவாதத்திற்குத் தேவையான பகுதியை மாத்திரம்தான் எடுத்துக்கொண்டார்கள். அதனால் அது குறைவிற்கானதாக இருந்தது. அவர்கள் ஆன்மீகம் சார்ந்த பகுதியைப் பாழடித்தார்கள், எங்கும், எப்போதும் நமது மார்க்கம் கடைப்பிடித்த பெருந்தன்மையைக் கைவிட்டார்கள்.

சுருக்கமாகக் கூறுவதனால் பதின்ஓராம் நூற்றாண்டில் அரேபியாவியல் அறிவியல் இயக்கம் அன்தலூஸியாவின் கலாநிலையங்களான தலீதலா, தென் இத்தாலியின் **-சாலீர்னோ-** கலாசாலைகள் ஊடாக அது ஐரோப்பாவிற்கு நகர்ந்தது. அத்துடன், (1209- 1907) ஷாம் தேசத்தை தாக்கிய தொடர்ந்த சிலுவைப் போர்களும் அறிவியல் வளர்ச்சிக்கான காரணகளாக அமைந்தன.

முஸ்லிம்களின் இந்த அறிவியல் வளர்ச்சியானது ஐரோப்பியர்களை இரு வகையான வழிமுறைக்குத் தள்ளியது. முதலாவது: கடும் போக்குடைய மதவாத சிந்தனை. இது சிலுவைப் போரைத் தோற்றுவித்தது. இரண்டாவது: அரபு முஸ்லிம்களிடம் காணப்பட்ட அறிவியல் பாரம்பரிய ஊற்றுக்கள். இவற்றைக் கொள்ளையடித்து தமது பிரதேசங்களுக்கு எடுத்துச் சென்றனர். (1)
இவ்வாறு நோக்குகின்ற போது ஐரோப்பாவின் அறிவியல், கலாசார, சமூகவியல் வீழ்ச்சிக்கு **கிரிஸ்தவ மதத்திற்குப் பாரிய பங்குண்டு என்பதை மறுக்கமுடியாது.**

-------------------------------------

1 **أبو الحسن علي الندوي : ماذا خسر العالم بانحطاط المسلمين - (1 / 185**

2 **- حمدي شفيق ، ا لإسلام والآخر الحوار هو الحل - (1 / 98)-**

# அறிவியல் எழுச்சிக்கு களம் அமைத்துத் தந்த வஹியின் வருகை.

முஹம்மத் (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்னர் மக்கள் வாழ்ந்த காலம் ஜாஹிலிய்யா அறியாமைக்காலம் என வர்ணிக்கப்படுகின்றது. நாகரீகம், பண்பாடு, கலாச்சாரம் என அனைத்துப் பகுதிகளும் வீழ்ச்சியின் உச்ச கட்டத்தை எட்டி இருந்தது.

சாதியம் தலைவிரித்தாடியது, குலஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. வஹியின் வழிகாட்டலில் இருந்து மக்கள் நீண்ட தூரம் விலகி வாழ்ந்தனர். தீமைகள் நன்மைகளாக சித்தரிக்கப்பட்டன, பெண்கள், நலிவுற்றோரின் உரிமைகள் பறிக்கபப்பட்ட நிலையிலும் அடிமைகள் கைகள் கட்டப்பட்டவர்களாகவும் வழி நடத்தப்பட்டுக் கொண்டிருந்தனர்.

நபி (ஸல்) அவர்கள் இறைத்தூதராக தேர்ந்தெடுக்கப்பட்டதும் அல்குர்ஆனில் முதலாவதாக இறக்கி வைக்கப்பட்ட **அல் அலக்** அத்தியாயத்தில் இடம் பெறும் முதல்பகுதி இறைமறை வசனங்கள் கல்வி, மனித படைப்பின் துவக்கம் பற்றியே பேசுகின்றது. இது அறியாமைக்கால வாழ்விற்கு முற்றுப்புள்ளியாகும் என்பதை ஆருடம் கூறுவதாய் அமைந்தது.

மதீனாவில் ஹிஜ்ரி முலாவது ஆண்டு நபிகள் நாயகத்தால் தொடக்கிவைக்கப்பட்ட இஸ்லாமிய கிலா∴பத் ஹிஜ்ரி 11வரை மிக சிறப்பாக நடைபெற்றது. அவர்களின் பின் ஆட்சிக்கு வந்த கலீபாக்கள், உமைய்யா, அப்பாஸிய ஆட்சியாளர்களால் தொடர்ந்தும் முன்னேற்றகராமாகவே முன்னெடுக்கப்பட்டு வந்தது. அவர்களின் ஆட்சியில் இஸ்லாமிய அறிவியல் துறைக்கு அலாதியான முக்கியத்துவம் வழங்கப்பட்டது.

உமைய்யா ஆட்சியைப் போன்று அப்பாஸியர் ஆட்சியிலும் இஸ்லாமிய வெற்றிகள் தொடர்ந்தது. நிலப்பரப்பு ஓரளவு விரிவடைந்து சென்றது. இஸ்லாமிய கலாச்சார எழுச்சி, ∴பிக்ஹ் மத்ஹபுகள், சிந்தனை சார் கல்விநிலையங்கள் இக்காலத்தில் தோற்றம் பெற்றன. அவ்வாறே, கட்டடக்கலை, நவீன நகரங்கள் அமைத்தல், புதுப்புது விஞ்ஞான கண்டுபிடிப்புக்கள் என பல்வேறுபட்ட துறைகளிலும் ஆர்வம் காட்டப்பட்டது.

ஹிஜ்ரி ஐந்தாவது ஆண்டு சல்ஜோக்கியர்களிடம் இருந்து முஜாஹீன்களால் அனாதோள் பிரதேசமான சின்னாசியா விடுவிக்கப்படுகின்றது. இதனால், பைஸான்தியர் எஞ்சி இருந்த தமது செல்வாக்கையும் இழந்தனர். ரோமர்கள் தமது ஆட்சித்தலையகமான கொஸ்டான்தி நோபிளை முழுமையாகப் பறிகொடுத்தனர் (1)

இஸ்லாமிய கலாச்சாரம் பகுத்தறிவிற்கும், ஆன்மீகத்திற்கும் இடையில் உறவை உண்டு பண்ணியதாக இருந்ததன் மூலம் அது ஏனைய கலாச்சாரங்களில் இருந்து முழுமையாக வேறுபடுகின்றது.

இஸ்லாமிய நெறிமுறைகளுக்கும் போதனைகளுக்கும், நேர் எதிரான அறிவுகளைத் தவிர ஏனைய அறிவுகளை ஒருவர் தேடிப்படிப்பதை இஸ்லாம் அங்கீகரிக்கின்றது. மட்டுமின்ற அவர்களை அறிஞர்கள் என்ற உயர்பட்டியலில் இணைத்துப் பேசுகின்றது.

பகுத்தறிவிற்கு முன்னுரிமை வழங்கி படைத்தவனைப் பற்றிச் சிந்தனை செய்வதால் இஸ்லாம் முன்வைக்கின்ற பல அடிப்படை அம்சங்களை நிராகரிக்கின்ற நிலை உருவாகும் என்ற காரணத்தால் பகுத்தறிவிற்கு மார்க்கத்தில் இரண்டாம் நிலையை வழங்கி இருக்கின்றது.

---------------

1- (3 / 1) - أسس النهضة الراشدة

இஸ்லாம் சிந்தனைச் சுதந்திரம் வழங்கி இருப்பதை அவதானித்த ஐரோப்பியர் மதத்தீவிரவாத சிந்தனையால் மூடப்பட்டுக்கிடந்த தமது சிந்தனையைத் திறக்க இஸ்லாமிய தர்க்கவியல் நூல்களை மொழியாக்கம் செய்தனர். இதனால் மதத்தை வெறுத்த ஐரோப்பாவில் அறிவியல் எழுச்சி தூவப்பட்டது என்கின்றனர் ஆராட்சியாளர்கள்.

இந்நிலையில், மேற்கில் முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் இருந்து வந்த அன்தலூஸியாவில் இருந்து கிழக்கால் சீனாவின் பெரும் சுவர்களைக் கூட இஸ்லாமிய அறிவியல் கலாசாரம் உமைய்யா ஆட்சியில் சென்றடைந்துவிட்டது.

இதை நோக்கின்ற போது ஐரோப்பா அறிவியல், கலாச்சார இருளில் மூழ்கி தத்தளித்திருக்கின்றது. அது மிகவும் பிற்பட்ட காலத்திலேயே அறிவியல் ஆய்வில் ஈடுபாடு காட்டியுள்ளது என்பது புலானாகின்றது.

தமது சிந்தனைகளுக்கு திரையிட்டிருந்த கிரிஸ்தவ திருச்சபைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி செய்தனர், திருச்சபைகளுக்கு பயந்து தமது அறிவியல் பயணத்தை மேற்கொண்ட இந்தக்காலப் பகுதி நெருப்பில் நடப்பது போன்ற சோதனையான ஒரு காலப்பகுதியாக இருந்துள்ளது.

இஸ்லாமிய அறிவியல் பாரம்பரியங்களை படிக்கத் தொடங்கினர். இஸ்லாமி நூலகங்களில் காணப்படும் நூல்களை மொழிமாற்றம் செய்யும் பணியில் தம்மை ஈடுபடுத்தினர்.

மேலாதிக்க சக்தியாக விளங்கிய கிரிஸ்தவ திருச்சபைக்கு அஞ்சி ஐரோப்பியர் அறிவைத் தேடிய போது முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் இருந்த கூ.ஃபா, ஹலப், பஸரா, பக்தாத், டமஷ்கஸ், கைய்ரோ, ரிக்கா, புஸ்தாத், அஸ்கர், கைரவான், அல்பாஸ், அல்ஜீரியா போன்ற பல நகரங்கள் இஸ்லாமிய முன்னோடி நகரங்கள் என்ற பெரில் ஜொலித்துக் கொண்டிருந்தன. இன்னும் பல புதிய நகரங்கள் உருவாக்கப்பட்டன.

*இஸ்தன்பூல், டமஸ்கஸ், கைய்ரோ, ஹலப், புகாரா, ஸமர்கன்த், டில்லி, ஹைதராபாத், பலஹ், திர்முத், கஸ்னா, தலீதலா(***Toledo***) குர்துபா, இஷ்பீலிய்யா, முர்ஸிய்யா, சராய்போ, அஸ்.ஃபஹான், மற்றும் பல முக்கிய நகரங்களில் காணப்பட்ட மஸ்ஜித்கள் கட்டிடக்கலை பற்றி உலகுக்கு அறிவித்துக் கொண்டிருந்தன. அவற்றின் நூதன சாலைகளில் மாதிரி நகரப்படங்கள் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.*

*உமைய்யா ஆட்சியில் விரிவான எல்லையைக் கொண்ட சாம்ராஜ்யமாக இஸ்லாமிய சாம்ராஜ்யம் விளங்கியது. கிழக்கால் சீனா, பர்மா முதல், மேற்காக கிழக்குபாகிஸ்தான், இந்தியா முதல் பிரான்ஸ், மற்றும், இஸ்பைன் வரைப் பரந்து விரிவடைந்து காணப்பட்டது. உஸ்மானியர் ஆட்சியில் ஐரோப்பா மற்றும் யூனான்- கிரேக்கம் வரை விரிவடைந்தது. உஸ்மானியர் வீழ்ச்சியால் ஐரோப்பியர் தாம் இழந்த நிலங்களை மீண்டும் கைப்பற்றிக் கொண்டனர்.*

நபி (ஸல்) அவர்களின் மரணத்தின் பின்னால் இரு நூற்றாண்டுகள் இஸ்லாமிய உலகின் பல பாகங்களிலும் இஸ்லாமிய அறிவியல் நூல்கள் பரவிக்காணப்பட்டன. ஒவ்வொரு இடங்களிலும் தனியார், மற்றும் அரச நூலகங்கள் பல்கிப்பெருகிக் காணப்பட்டன. இஸ்லாமியர்கள் அதனை வாசிப்பதில் பெரும் ஆர்வம் காட்டினர். டமஷ்கஸ், ஸமர்கன்த், பக்தாத் ஆகிய நகரங்களில் காகிதங்கள் அச்சிடப்படுவது படிப்பில் ஆர்வளர்களுக்கு ஒரு உந்து சக்தியாகவும் உதவியாகவும் இருந்தது. இந்த நூலக முறை இஸ்லாமிய உலகின் பிரதான நகரங்களுக்கும் தகவல்

வலைப்பின்னல் ஊடாக பரிமாறப்பட்டன. டமஸ்கஸ், அல்லது பக்தாதில் அச்சிடப்படும் நூல்கள் ஒரு மாதத்தினுள் இஸ்பைனில் உள்ள குர்துபா நகரை வந்தடையும் நிலை காணப்பட்டது. இதன் மூலம் கல்வி, அரபுமொழி பரவுதல், அரபு எழுத்தணி, குர்ஆனிய அறிவு, கலாசார ஒற்றுமை உருவாகக் காரணமானது.

## அறிவியலுக்கு ஆர்வமூட்டிய இஸ்லாம்

இஸ்லாம் கல்வியை, உலகியல் கல்வி, ஆன்மீக –மார்க்க-க் கல்வி என வகுத்து நோக்கவில்லை. உலகில் வாழுகின்ற போது தேவைப்படுகின்ற பயனள்ள அனைத்துவிதமான கல்வியையும் அங்கீகரிக்கின்றது.

சர்வவேத மதஒப்பீட்டாய்வாளர்களில் ஒருவரான **டாக்டர், ஜாகிர் நாயக் அவர்கள்** “அல்பர்ட் ஐஸ்டீன்” என்ற விஞ்ஞானியின் கருத்துப் பற்றி அறிவிக்கின்ற **"Science Without Religion is lame. Religion without Science is blind"** மதம் இல்லாத அறிவியல் முடமானது. அறிவியல் இல்லாத மதம் குருடாது. என்றாராம். **(அல்குர்ஆனும் விஞ்ஞானமும்)**

அல்குர்ஆன் அறிவியல் பற்றிய அனைத்து மூலக்கூறுகளையும் தொட்டுப் பேசி இருக்கின்றது. கணிதம், விஞ்ஞானம், வரலாறு, புவியியல் என சகல பகுதிகளையும் பேசியுள்ளது. ஆரம்ப கால இஸ்லாமிய அறிஞர்கள் சகல துறையிலும் பிரசித்தி பெற்றவர்களாகவும் விளங்கினார்கள்.

ஸைத் பின் ஸாபித் (ரழி) அவர்கள் கணித அறிவில் திறமையானவர்களாக இருந்தார்கள், அதனால் அவர்கள் வாரிசுமை சட்டத்தில் சிறந்த அறிஞராக விளங்கினார்கள். அப்துல்லாஹ் இப்னுமஸ்ஊத், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் போன்ற நபித்தோழர்கள் அல்குர்ஆனியக்கலையில் திறமைசாலிகளாக விளங்கினார்கள்.

அபூஹுரைரா (ரழி), அன்னை ஆயிஷா (ரழி) அவர்கள் போன்ற நபித்தோழர்கள் ஹதீஸ்கலையில் திறமைமிக்கவர்களாக விளங்கினார்கள். நபி (ஸல்) அவர்களால் பல மருத்துவ முறைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது.

அல்ஹாரிஸ் பின் கல்தா (மரணம்: ஹி,13. கி.பி. 634) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வைத்தியத்துறையில் பிரசித்து பெற்றவராக இருந்துள்ளார்கள். பாரஸீகத்தில் மருத்துவம் படித்த இவர், நோய்களையும், அதற்கான நிவாரணிகளையும் கண்டுபிடிப்பதில் பிரசித்து பெற்று விளங்கினார்கள். அவ்வாறே அன்னள்ர் பின் அல்ஹாரிஸ் (மரணம்:ஹி.2, கி.பி.624) ஆரம்ப கால கிரேக்க மருத்துவ நூல்களைப் படித்துத் தேறியவர். அவ்வாறோ, இப்னு அபீரமீதா அத்தமீமி என்பவர் வெட்டுக்காயங்களுக்கு சிகிச்சை அளிப்பதில் பிரசித்தி பெற்றவராக இருந்தார். இருந்தும், மருத்துவ அறிவியல் பற்றிப் பேசுகின்ற நூல்களில் இவர்கள் பற்றிய விரிவான குறிப்புக்களையோ, அறிவியல் தடயங்களையோ கண்டு கொள்ளமுடியாது.

முஸ்லிம்கள் அறிவியல் வளர்ச்சிக்கு வித்திட்ட காலப்பகுதியில் **அன்தலூஸியா -இஸ்பைன்-** கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையமாக விளங்கியது. அங்கிருக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் குர்துபா நகரும் ஒன்றாகும். அதன் அறிவியல் வளர்ச்சி பற்றி இவ்வாறு கூறப்படுகின்றது.

கி.பி. பத்தாண்டின் ஆரம்பத்துடன் குர்துபா நகரில் மட்டும் 700 பள்ளிகள், 60000 மாளிகைகள்,70 பொது நூலகங்கள், அவற்றில் மாத்திரம் 600000 நூல்கள் காணப்பட்டன. இவற்றில் இருந்து 60000 ஆய்வுகள், அரபுக்கவிதைகள் வெளியிடப்படும். கைரோவின் பொது நூலகத்தில் மாத்திரம் கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் நூல்கள் காணப்பட்டன. லெபனானின் **தராபில்ஸ்** நகர நூலகத்தில் மாத்திரம் **மூன்று மில்லியனுக்கும்** அதிகமான நூல்கள் காணப்பட்டன. இவை சிலுவைப் போராளிகளால் உடைத்து சுக்குநூறாக்கப்பட்டது.

அது மாத்திரமின்றி, இவற்றின் ஊடாக நூல்கள் இரவலாக வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன், அறிஞர்கள் தங்குதல், கல்வி போதித்தல், விவாதங்கள், கலந்துரையாடல்கள் நடாத்தவும் இங்கு வசதி செய்து தரப்பட்டிருந்தது. இங்கிருந்து அறிவியல் நூல்கள் பல குறிப்பிட்ட துறைகளில் வெளியிடப்பட்டன. (1)

----------------

1- من وكيفيديا الحرة

# அறிவியல் முன்னோடிகளாக விளங்கிய முஸ்லிம்கள் பற்றி

முஸ்லிம் அறிஞர்கள் ஐந்து நூற்றாண்டுகளுக்கும் மேலாக அறிவியல் காலாச்சாராத்தின் உச்சத்தை அடைந்திருந்தனர். அப்போது ஐரோப்பாவின் மத்தியகாலப்பகுதியில் இருளில் மூழ்கிக்கிடந்தது.

இக்காலத்தில் நோபல் பரிசுத்திட்டம் கொண்டவரப்பட்டிருக்குமானால் முஸ்லிம்களில் ஒருவரே பலமுறை நோபல் பரிசை வென்றிருப்பார். கலீல் பின் அஹ்மத் அல்.ஃ.பராஹீதி, இப்னு துரைத், ய.ஃ.கூப் பின் இஸ்ஹாக் அல்கின்தி, இப்னு ஸீனா, பைறூனி, குவாரிஸ்மீ மற்றும் பலர் இதில் குறிப்பிடத்தக்கவர்கள். இருப்பினும் இவர்களின் நன்மையான பகுதிகள் மறைக்கப்பட்டு, அவர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள் ஐரோப்பியர்களால் பாழடிக்கட்டிருப்பது துரதிஷ்டமே.

இன்னும் சொல்வதானால் இந்த அறிஞர்களின் பேரப்பிள்ளைகள் கூட தமது பாட்டன்மார்களான இந்த அறிஞர்கள் பற்றி அறிந்திருக்க மாட்டார்கள். ஆனால் அந்நியர் அவர்கள் பற்றி நன்றாக அறிந்து வைத்துள்ளனர். அவர்களின் அறிவு, கண்டுபிடிப்பு, சிந்தனைகள், முயற்சிகளில் இருந்து பயன் பெறுவதுடன், அறிவின் உயர் நிலைகைளை அடைந்து பரிசுகளைப் பெறுபவர்களாக மாறிக் கொண்டிருக்கின்றனர். இருந்தும், இந்த அறிஞர்களின் கண்டுபிடிப்புக்களை மறுப்பவரே இவர்களில் அதிகம். ஆயினும், முஸ்லிம் அறிஞர்களின் அறிவியல் கண்டுபிடிப்புக்கள் பற்றி புகழக்கூடிய விரல் விட்டு எண்ணக் கூடிய சில நடு நிலையாளர்கள் அவர்களில் இல்லாமல் இல்லை.

இப்னு சீனாவின் **''கானூன்'' என்ற நூல் புரோக்ஸல் பல்கலைக் கழகத்தில் 1909 வரை போதிக்கப்பட்டது என** யுனிஸ்கோ சஞ்சிகை (1980-01- பக்கம் 38-ல்) செய்தி வெளியிட்டிருந்தது. டாக்டர் ஓஸ்லர் என்பவர் கானூன் பற்றிக் கருத்து தெரிவிக்கையில்: வைத்தியத்துறையில் தனியானதொரு மூலாதார நூலாக கெனன் பல தசாப்தங்கள் வாழ்ந்தது. பதின் ஆறாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டில் மாத்திரம் பதின்ஐந்து தடவைகள் அது அச்சிடப்பட்டது. பதின் மூன்றாம் நூற்றாண்டு செயல்வடிவம் பெற்று, பதினேழாம் நூற்றாண்டுவரை நீடித்தி மேற்கத்தியர்களின் அறிவியல் புரட்சிக்கு தூண்டுதலாக இருந்தவர் இப்னு சீனாதான் என்கிறார்.

அக்கால முஸ்லிம் அறிஞர்களின் நூல்கள் அரபு மொழியில் காணப்பட்டன. பின்னர், அவற்றை இவர்கள் மொழியாக்கம் செய்தனர். இஸ்பைன், ஸகலிய்யா பிரதேசங்களில் இருந்தும், சிலுவைப் போரின் போதும் அவற்றை ஐரோப்பாவிற்கு கடத்திச் சென்றனர்.

மட்டுமின்றி அவகைளை அவர்கள், மணனம் செய்தது கெண்டதுடன், தமது காப்பங்களில் அவற்றைப் பத்திரமாக பாதுகாகக்கவும் செய்தனர், முஸ்லிம்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த நிலையில் அவற்றின் மூலம் பல புதிய கண்டுபிடிப்புக்களை உலகிற்கு அறிமுகம் செய்தனர்.

ஆரம்ப முஸ்லிம் அறிஞர்கள் பொதுவாக குர்ஆனை மணனம் செய்வதர்களாக விளங்கினர். அவர்களில் ஒருவர் பல துறைகளில் கற்றுத்தேறிய விற்பண்ணராக விளங்கினார்.

உதாரமாக இமாம் அல்கின்தி அவர்களை எடுத்துக் கொண்டால் அவர் பதினைந்து வயதில் குர்ஆனை மணனம் செய்த ஹாபில்களில் ஒருவர். இருந்தும் தர்க்கவியல், கணிதவியல், இயற்பியல்-

Physics-, மருத்துவம், புவியியல், விஞ்சானம், இசை நடனம் ஆகியவற்றில் திறமை பெற்றவராக இருந்தார். (1)

---

1- الدكتور إبراهيم بن مراد ، مظاهر من ريادة الحضارة الإسلامية في العلوم الكونية (الطب والصيدلة والفلك

## அறிஞர்களின் துறைசார் அறிவியல் கண்டுபிடிப்புக்கள்

இஸ்லாம் மனிதனை அறிவு ஆராய்ச்சியில் ஈடுபடுமாறு ஆர்வமூட்டுகின்றது. ஒரு முஸ்லிம் இஸ்லாமிய வரையறைகளுக்குட்பட்டு தாரளமாக ஆராய்ச்சியில் ஈடுபடமுடியும்.

يَا مَعْشَرَ الْجِنِّ وَالْإِنْسِ إِنِ اسْتَطَعْتُمْ أَنْ تَنْفُذُوا مِنْ أَقْطَارِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ فَانْفُذُوا لَا تَنْفُذُونَ إِلَّا بِسُلْطَانٍ [الرحمن : 33]

ஜின், மனித கூட்டத்தாரே பூமியின் (உலகின்) எல்லாத் திசைகளுக்கும் உங்களால் செல்லமுடியுமானால் தாராளமாக செல்லுங்கள். நீங்கள் சுல்தான் என்ற ஊடகக்ருவி, ஆற்றல் மூலமே தவிர செல்ல ஆற்றல் பெறமாட்டீர்கள். (1)

அந்த வகையில் அல்குர்ஆன் தூண்டுகின்ற அறிவியல் துறைக்கு முஸ்லிம்கள் பாரிய பங்களிப்புச் செய்தனர். வானியல், புவியயில், கணிதவியல், இரசாயனவியல், இயற்பியல், மருத்துவம், கட்டடக்கலை என பல துறைகளில் ஆர்வமும், ஈடுபாடும் காட்டினார்கள். அவற்றின் பெயர்களைக் கூட அரபியில்தான் அழைத்தனர்.

உதராணமாக علم الجبر இல்முல்ஜப்ர், علم الكيمياء இல்முல்கீமியா, علم المثلثات இல்முஸல்லஸாத் போன்றவற்றின் பெயர்களைக் குறிப்பிட முடியும்.

முஸ்லிம்கள் பங்களிப்புச் செய்த அறிவியல் கண்டுபிடிப்பு பற்றிய சுருக்கமான ஒரு பார்வை இங்கு தரப்படுகின்றது.

### வானியல்

விண்ணின் இயக்கம், நச்சத்திரங்கள், கோழங்கள் போன்றவற்றின் ஓட்டங்கள், அசைவுகள், நகர்வுகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சிக்கு வானியல் எனப்படுகின்றது. அல்குர்ஆனின் கட்டளைக்கு அமைவாக இத்துறையில் ஈடுபட்ட முஸ்லிம்கள் கிரேக்க, பாரஸீக, இந்திய நூல்களின் துணை கொண்டு இவற்றில்

ஈடுபட்டனர். அவற்றின் மீது மாத்திரம் தங்கி இருக்காது மனித இனத்திற்கு பயனுள்ள தமது பல கண்டுபிடிப்புக்களையும் இதில் அதிமாக இணைத்து அதை விரித்தி செய்தனர்.

கலீ:.பா அபூஜ:.பர் அல்மன்சூரின் காலத்தில் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட நட்சத்திரங்கள் பற்றியஇருநூல்கள் அரபிக்கு மொழியாக்கம் செய்யபட்டன.



சந்திர கிரணத்தை தெளிவுபடுத்தும் அரபு கைஎழுத்துப்பிரதி ஒன்றின் நகல்

**مخطوطة عربية تشرح ظاهرة خسوف القمر.**

--------------------------

1- سورة الرحمن آية رقم: 33 2- علي بن نائيف الشحوذ . الحضارة الإسلامية بين أصالة الماضي وآمال المستقبل - (1 / 16)

***வானியல் துறையில் பிரசித்து பெற்று விளங்கிய முஸ்லிம் விஞ்ஞானிகள்***

***அபூ அப்தில்லாஹ் முஹம்மத் பின் ஜாபிர் ஸினான் அல்பத்தானி (மரணம்: 317 ஹி). இவர், ஸாபித் பின் கர்ரா அல்ஹர்ரானி என்ற பிரசித்தி பெற்றி மொழியபெயர்ப்பளர்களில் ஒருவர். இவர் தனது பெயரில் வானியல் ஆய்வுமையம் ஒன்றை நிறுவி இருந்தார். இங்கு வானியில் பற்றிய மிக நுட்பமான கருவிகள் பொருத்தப்பட்டிருந்ததுடன், அதன் உபயோக முறையும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது. அது அஸ்டர்லாப் என அறியப்படுகின்றது.***

இவரது வானியல் கோட்பாடுகள் பற்றிய நூலானது, கிரேக்க வானியல் விஞ்ஞானியான பத்லீமோஸ் என்பவர் நூலுக்கு ஒப்பானது. இதே அல்அபத்தானி அவர்கள் நட்சத்திரங்களின் இயக்கம் பற்றியும், அதன் எண்ணிக்கை பற்றியும் நூல் ஒன்றை தொகுத்திருந்தார். அது ஐரோப்பாவின் அறிவியல் எழுச்சிக்காலம் வரை போதிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

இவர் சூரியன், சந்திரனுக்கிடையிலான தூர அளவு, சந்திர சூரிய கிரகணங்களுக்கிடையில் காணப்படும் கால அளவு போன்றவற்றையும் விளக்கி இருந்தார். இவரது துல்லியமான ஆய்வானது இன்றைய நவீன ஐரோப்பியர்களை வியப்பில் ஆழ்த்திய ஆய்வாக இருந்தது.

அவ்வாறே, ***அபூ இஸ்ஹாக் பின் இப்ராஹீம் அன்னக்காஷ் அஸ்ஸர்காலி*** என்ற மற்றொரு அறிஞரும் முஸ்லிம் விஞ்ஞானிகளின் பட்டியலில் கூறப்படுகின்றார். இவர் ஹிஜ்ரி 4வது நூற்றாண்டில் வாழ்ந்த குர்துபாவில் பெரும் விஞ்ஞானியாகும். பிறந்து அன்தலுஸியா தலீதலாவில் பணியாற்றினார். இவர் வானியல் நிலையம் ஒன்றை உருவாக்கினார்.

الأسطرلاب **அஸ்டர்லாப் என்ற அந்த** வானியல் கருவியை கண்டுபிடித்து காற்றின் அளவு, வேகம், இரவு, பகலின் அளவு போன்றவற்றை கணித்தார். இவரது இந்த ஆய்வு ஐரோப்பியர்கனை வியப்பிற்குமேல் வியப்பில் ஆழ்த்தியது மட்டுமின்றி, அவர்களைத் திகைக்கச் செய்தது.

இவரது வானியல் ஆய்வுத் தொகுப்புக்களில் இருந்து ஐரோப்பிய வானியல் விஞ்ஞானயான கோபர் நிக்கஸ் என்பவர் அதிகமாக பயன்பெற்றதாகக் கூறப்படுகின்றது. அவர் தனது ஆய்விற்கான சான்றுகளை அபூஇஸ்ஹாக்கையும் ஆதாரமாகக் கொண்டிருக்கின்றார். பர்காலி என்பவரது நூல் ஐரோப்பாவிலும், மேற்கு ஆசியாவிலும் எழுநூறு ஆண்டுகள் போதிக்கப்பட்டதாக வரலாறு குறிப்பிடுகின்றது. இவ்வாறு பல அறிஞர்கள் வானியல் துறையில் சிறந்து விளங்கி இருக்கின்றார்கள்.

## கணிதவியல்.

இது கணிதம், அல்ஜீப்ரா (அட்சர கணிதமுறை) பொறியியல் கணிதமுறை போன்ற கணிதம் தொடர்பான அனைத்து வழிமுறைகளையும் குறிக்கும். இத்துறையில் முஹம்மத் பின் மூஸா அல்குவாரிஸ்மி (மரணம்: 232 ஹி) என்ற விஞ்ஞானி பிரசித்தி பெற்று விளங்கினார். அவரே அல்ஜீப்ரா முறையின் முன்னோடி அறிஞராகக் கொள்ளப்படுகின்றார். ஒன்று, பத்து, நூறு ஆகிய எண்ணிக்கைகளின் பெட்டிகளை அறிமுகப்படுத்திய பெருமை அவரையே சாரும். எண்களில் ஒற்றை எண்களில் இருந்து இரட்டை எண் முறையை இவரே அறிமுகம் செய்தார். عمليات الكسور العشرية பத்து எண்களில் உடையும் தானங்களைக் கையாழும் முறையையும், அடைப்புக்குறியிகுள் நீள, அகல

வழியாக இதை உபயோகிக்கும் முறையையும் கண்டுபிடித்தார். இது பற்றி ஐரோப்பியர் அறிந்திருக்கவில்லை.

அறிஞர் குசாரிஸ்மி மாத்திரம் இதில் கைதேர்ந்தவராக இருக்கவில்லை. மாற்றமாக இன்னும் பல அறிஞர்கள் இதில் திறமைசாலிகளாக விளங்கினார்கள். அபூகாமில் ஷுஜா பின் அஸ்லம் அல்மிஸ்ரி, வஸ்னான் பின் அல்.ஃ.பத்ஹ் அல்ஹர்ரானி, அல்கின்தி, முஹம்மத் பின் ஹஸன் அல்குர்ஹி இவர் ‘கிதாபுல் கா.ஃ.பி’’ என்ற கணித நூலை தொகுத்திருந்தார். இதில் கணிதவியலில் பல புதியவழிமுறைகள் பற்றி விளக்கியுள்ளார்

அல்ஜீப்ரா கணிதமுறை முஸ்லிம்கள் தொடக்கிவைத்தாலும் பாபிலோன், இந்தியா, கிரேக்கம் போன்ற பிரதேசங்களில் இதற்கான அடிப்படை இருந்துள்ளது. இருப்பினும் முஸ்லிம்கள் அதை விருத்தி செய்து பல புதிய வழிமுறைகளை கணிதவியலில் தேர்ச்சி பெற்ற அறிஞர்களைக் கொண்டு அறிமுகப்படுத்தினர். இன்றும் அரபு மொழியிலான தடங்களே காணக்கிடைக்கின்றன. உலகில் பல்வேறுபட்ட மொழிகளிலும் அல்ஜீப்ரா என்ற அரபு பெயரில் இன்றும் பாதுகாக்கப்பட்டிருக்கின்றது.

குவாரிஸ்மி இதில் முன்னோடியாவார். அல்ஜீப்ரா கணித முறை இவரிடம் சிறந்த கணித முறைகளில் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. (الجبر والمقابلة) என்ற நூலும் இவருக்குண்டு. கணித வரலாற்றில் முதலாவது தடவைாக இவரே சில குறியீடுகளைப் உபயோகித்ததார். இது கணித வரலாற்றில் ஒரு முன்னேற்றகரமான அறிவுமுறைதான். குவாரிஸ்மிக்கு முன்னதாக இந்தக் குறியீட்டுமுறையை டெகோட் என்பவரும், மற்றும் பலரும் உபயோகித்திருந்தனர் என்றாலும் பூச்சியத்தை முதலாவதாக முஸ்லிம்களே அறிமுகப்படுத்தினர். இதற்கு முன்னர் அது புழக்கத்தில் இருக்கவில்லை.

அபுலஅபூஹனீ.ஃ.பா அத்தீனூரி ( மரணம்: 282 ஹி) அபுல்வ.ஃ.பா அல்பூஸ்ஜானி (மரணம்: 388 ஹி) ஹஸன் அல் கஸ்ஸாவி (மரணம்: 891 ஹி), ஷுஜா பின்அஸ்லம் அல்மிஸ்ரி, போன்றோர் அல்ஜப்ர் கணித முறையில் கணிதவியல் மேதைகளாக விளங்கினார்கள். இது ஐரோப்பியர்களுக்கு பொறியியல் துறையில் கால்பதிக்க உதவியது.

المثلثات என்ற முக்கோண கணித முறையை இவர்கள் அறிமுகம் செய்தனர். அல்ஹஸன் பின் ஹைஸம், அபூஜ.ஃ.பர் அல்ஹாஸின் குவாரிஸ்மியின் ஷாகிர், அஹ்மத், அல்ஹஸன் என்ற மூன்று ஆண் பிள்ளைகள், மற்றும் பலர் கட்டடக் கலை தொடர்பான பொறியியல் கணித முறையில் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர். இவர்கள் பொறியியல், வானவியல், மெக்கானிக் போன்ற துறைகளில் பல நூல்களை தொகுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பின்வரும் துறைகளிலும் தமது கவனத்தைச் செலுத்தினார்கள்.

## علم الجغرافيا وعلاقته بالفلك والرحلات:

كان المسلمون الأوائل يعيشون في بيئة صحراوية، ارتبطوا بها، ولمسوا تغيرات الجو، وعرفوا تطوراته، وكانت تضاريس الصحراء، وما بها من جبال وتلال وهضاب وسهول ووديان، وأماكن المياه، كان ذلك دافعًا لمعرفة المسلمين بعلم الجغرافية وبراعتهم فيه.

لقد استفاد المسلمون من معارف الأمم السابقة في الجغرافية، وأضافوا إليها معلومات جغرافية كثيرة، فقد برعوا في مجال الجغرافيا الوصفية، وهي ما عرف بعلم المسالك والممالك، وقاموا في ذلك بعدة رحلات برية وبحرية كثيرة وصفوا خلالها الطرق والمسافات والمدن والأقطار وصفًا دقيقًا رائعًا، كما برع المسلمون في مجال التأليف الجغرافي ومحاولة التفسير العلمي لبعض الظواهر الجغرافية، ونجحوا نجاحًا باهرًا في فن رسم الخرائط، مما يدل على الدقة وسعة الثقافة التي وصل إليها الجغرافيون المسلمون في معرفة البلاد ورسم مواقعها.

وكان أشهر رسَّامي الخرائط الإدريسي الذي رسم خريطة للأرض، كما كانت تعرف في عصره بناء على طلب ملك صقلية، وقد رسمها على كرة من الفضة الخالصة، ووضع عليها خطوط الطول والعرض، ومن أهم الجغرافيين والرحالة المسلمين:

محمد بن موسى الخوارزمي وابنه أحمد، ويعد كتاب محمد بن موسى (صورة الأرض) الأساس الأول لعلم الجغرافية العربي، وقد استفاد منه الجغرافيون الأوربيون ومدحوه، واعتبروه تطورًا مفاجئًا في الوقت الذي وجد فيه.

الحضارة الإسلامية بين أصالة الماضي وآمال المستقبل – (1 / 17)

واليعقوبي (ت 266 هـ) وهو أبو الجغرافية العربية، ألف كتاب البلدان، واهتم فيه بالجغرافية الطبيعية، والنواحي البشرية لبلاد كثيرة، فوصف فيه بعض البلاد وصفًا مفصَّلا، وينفرد الكتاب بوجود دراسة مفصلة كاملة عن الطرق الرئيسية في فارس.

وياقوت الحموي (ت 626 هـ)، وهو من مشاهير الجغرافيين المسلمين، وقد ألف كتاب معجم البلدان، وهو معجم جغرافي هام، وقد رتب فيه البلاد على حسب حروف المعجم، ووصف فيه ما استطاع وصفه من المدن والبلدان مع ذكر الأحداث التاريخية المهمة التي تتصل بهذه البلدان بشيء من التركيز والاختصار.

ويضاف إلى هؤلاء جغرافيون آخرون أثَّروا تأثيرًا بالغًا في تطوير علم الجغرافية، نذكر منهم:

الإصطخري، وقد عاش في القرن الرابع الهجري، وهو أول من رسم خريطة العالم الإسلامي عن طريق رحلاته ومشاهداته الشخصية، واعتمد من جاء بعده من العلماء على هذه الخريطة، وعلى رأسهم الإدريسي.

والبلخي (ت 322 هـ) وهو من أوائل من ألفوا في الجغرافية الوصفية من العرب، كما أنه رسم خرائط للأقاليم الإسلامية قدر ما تيسر له.

والمسعودي (ت 346 هـ)؛ وهو عالم ذو ثقافة واسعة وجغرافي فذ، ومؤرخ بارز، وقد لقبه المستشرقون هيرودوت العرب أو بطليموس المسلمين، وله خريطة للعالم تعد من أدق الخرائط العربية، ومنها يتضح أن المسعودي من أعظم الخرائطيين المسلمين، وأحسنهم تصورًا لصورة الأرض.

**علم الفيزياء:**

درس المسلمون ظواهر عديدة في البحر، كالمد والجزر، والبراكين، وظواهر جوية كالضغط الجوي والرياح والأعاصير، والمطر والسحاب والبرق والرعد وظواهر الصوت والضوء وغيرها. وظهر الحسن بن الهيثم، صاحب النظريات المعروفة في علم البصريات.

وقد اهتم المسلمون بالأوزان، واستخدموا موازين غاية في الدقة، كما تفوقوا في تقدير الأوزان النوعية (النسبة بين وزن المادة ووزن حجم مساوٍ لحجمها من الماء).

ولقد اخترع البيروني آلة مخروطية، يتجه مصبها إلى أسفل، صنعها بنفسه ورسمها، لاستخراج الوزن النوعي، وذلك عن طريق ملء هذه الآلة بالماء حتى المصب (النهاية)، ثم يوضع فيها المادة التي يريد معرفة وزنها النوعي، فيخرج من حولها قدر من الماء من خلال المصب، ويسقط في الكفة، فيكون الوزن النوعي لها هو النسبة بين وزنها ووزن الماء المزاح، ونجح البيروني عن طريق تلك الآلة في تحديد وزن ثمانية عشر معدنًا كالذهب والزئبق والنحاس والحديد والياقوت وغيرها، وتوصل إلى نتائج قريبة من نتائج العصر الحديث.

كما درس علماؤنا الأرض وقالوا بكرويتها، وعرفوا جاذبية الأرض للأجسام، ودوران الأرض حول نفسها كما ذكر البيروني، وقد سبق علماؤنا نيوتن، ومهدوا له الطريق لوضع قانون الجاذبية، وقد تفنن المسلمون في صناعة الآلات الدقيقة مثل الساعة التي أهداها هارون الرشيد سنة (191هـ) إلى أحد ملوك أوربا، وكانت مصنوعة من النحاس الأصفر بمهارة فنية عالية.

ودرس المسلمون الصوت والضوء، وعرفوا كيفية تمييز الأصوات من خلال دراسة الأوتار الصوتية، واهتزازاتها، وعرفوا المرايا بأنواعها. وهذا قليل من كثير عن علم الفيزياء عند المسلمين، وعطائهم الحضاري في ميدان الفيزياء، ولولا هذا العطاء ما تقدم الغرب هذا التقدم السريع في علوم الفيزياء.

**علوم الحياة:** وهي العلوم التي تدرس النبات والحيوان. وقد اشتغل المسلمون بعلمي النبات والحيوان، واهتموا بهما اهتمامًا عظيمًا، وكانت تعاليم القرآن والإشارات العلمية الواردة فيه خير دافع للمسلمين للبحث في جميع فروع المعرفة، ومنها علوم الحياة.

وقد ألف أبو حنيفة الدينوري الملقب بشيخ علماء النبات كتاب (النبات)، وألف الإدريسي كتاب (الجامع لصفات أشتات النبات).

وقد اهتم المسلمون بالزراعة، وأصبحت على أيديهم علمًا له أصوله وقواعده قبل باقي العلوم الأخرى، وقد اعترف الأوربيون بفضل العلماء المسلمين ودورهم في نقل كثير من النباتات إلى مصر والأندلس وصقلية، والتي استفاد منها الغربيون في زراعاتهم ومنها القطن، والبطيخ، وقصب السكر، والليمون، واهتموا بشق الترع والقنوات، وقد ذكر ابن حوقل في كتابه (المسالك والممالك) أخبارًا كثيرة عن هذه الترع والقنوات والأنهار.

كما اهتموا ببناء الخزانات وبناء السدود الضخمة على بعض الأنهار، وكذلك شق المجارى المائية تحت سطح الأرض. ومن أهم كتب الزراعة، كتاب الفلاحة الأندلسية لأبي زكريا محمد بن العوام الأشبيلي، وقد تحدث فيه عن أنواع التربة وأجودها، وما يصلح منها للبقول وغيرها وما لا يصلح لها. واهتم المسلمون بالحيوان، فدرسوه بالتفصيل في كتبهم، ومن أبرز من كتبوا في هذا المجال: الجاحظ في كتابه الحيوان، والدميري في كتابه حياة الحيوان الكبرى، كما وجدت كتب عن البيطرة مثل: علاج الحيوانات، ومنها كتب للرمَّاح (ت 711 هـ).

**علم الكيمياء:** لقد عرف المسلمون علم الكيمياء في وقت مبكر، وذلك على يد خالد بن يزيد بن معاوية (ت 85 هـ)، الذي ترك حقه في الخلافة؛ لأنه كان يحب العلم ويفضله على أي شيء آخر، فقام بترجمة كتب النجوم والطب والكيمياء.

وبرع في هذا الجانب جابر بن حيان (120 هـ–210 هـ) الذي أكد على أن التجربة هي أهم مراحل البحث العلمي، وبذلك وضع أسس المنهج التجريبي الحديث، وهو المنهج الذي يقوم على التجربة والملاحظة والاستنتاج، كما عرف

